முரசொலி

ஆசிரியர்: மு.கருணாநிதி

முரசு: ௬ | ௧௪-௨-௬௯ | வெள்ளி | ஒலி: ௩௩

பழங் கோட்டையை மீட்கப்...

நாடெல்லாம் ஒரே குடும்பம் — அண்ணன் தம்பிகள் — அக்காள தங்கைகள் — உற்ருர் உறவினர்கள்! ஒருவரை யொருவர் காணும்போதும் ஒருவரைப் பற்றி ஒருவர் கேள்விப்படும் போதும் ரத்த பாசத்தால் உந்தப்பட்டு உணர்ச்சிக்கு அடிமையாகிறவர்கள்! அன்று தொட்டு இன்றுவரையில் குடும்ப உறவோடு பழகிச் செயலாற்றும் தனிப் பண்பு கொண்டவர்கள்!



இந்தப் பண்பைக் குலைப்பதற்கு யார் முயன்ருலும் அவர்களைக் காண்பதும் தீது என்ற உறுதிப்பாட்டை உளத்தில் பதித்து நடை போடும் படை வீரர்கள் இந்தக் குடும்பத்தின் உறுப்பினர்கள்.

ஆசைகள் இந்த அன்புக் குடும்பத்தை அலைக்கழித்ததில்லை. சபலம் இத்தக் குடும்பத்தில் அடியெடுத்து வைத்ததில்லை. சந்தர்ப்பவாதம் இந்த வீட்டு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்ததுமில்லை. துரோகம், தொலைவில் நின்று கண் காட்டியதில்லை; தூய்மையை அழித்துவிட முயன்றவர்கள் வெற்றி பெற்றதுமில்லை. கொள்கையே உயிராய், இலட்சியமே மூச்சாய்க் கொண்டு பாடுபடும் எண்ணற்ற நல்லவர்களின் கூடாரம்—யாராலும் நாசமாக்க இயலாத அளவுக்கு வலுப்பெற்ற குடும்பம்—தியாக வளம் பெற்ற குடும்பம்!

"அன்புக்கோர் அண்ணன் உண்டு — அவருக்கு அருமைத்

[தொடர்ச்சி பக்கம்—4]

...புதுக்கோட்டையில் கூடினோம்!



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

24. ஜஸ்டீனியனும் ரோமானிய சட்டத் தொகுப்பும்.

அன்புள்ள மாதவி,

ரோம் சாம்ராஜ்யம் இரு கூறுகளாகப் பிரிந்து இயங்கியது என்பதைச் சென்ற கடிதத்தில் தெரிவித்திருந்தேன். கிழக்கத்திய ரோம் ராஜ்யத்தில் பால்கன் தீபகற்பம், ஆசியா மைனர், ஸிரியா, எகிப்து முதலிய பகுதிகள் அடங்கியிருந்தன. பார்க்கப் போனுல் அலக்ஸாண்டர் முன்பு நிறுவிய கிரேக்க சாம்ராஜ்யமே இப்பொழுது கிழக்கத்திய ரோம் ராஜ்யமாக விளங்கியது என்று சொல்லலாம். கிரேக்க மொழியே இதன் ராஜ்ய மொழியாக இருந்தது. கல்வியின் இருப்பிடமாய் முன்போல்அலக்சாண்டிரியாவே திகழ்ந்தது. மதத் துறையில்கூட கிழக்கு ராஜ்யமும் மேற்கு ராஜ்யமும் வேறுபட்டு விளங்கின. கிழக்கத்திய ராஜ்யத்தில் சக்ரவர்த்தியே பிரதான மதத் தலைவனுகவும் விளங்கினுன். மேற்கு ராஜ்யத்தில் சக்ரவர்த்தியின் ஆட்சி படிப்படியாக மறையவே ரோம் நகர பிஷப்பின் அதிகாரம் மதத் துறையில் உன்னத செல்வாக்கைப் பெற்றது. இந்த பிஷப்பே நாளடைவில் போப்பாண்டவர் என்ற பட்டத்தையும் பெற்ருர். மேற்கு ராஜ்யம் ஹூணர்களின் படையெடுப்பால் சிதறுண்டு போகவே, அதை மீண்டும் ஒன்றுபடுத்தி ரோம் ராஜ்யத்தை முன்போலவே சிறப்பு மிக்கதாய் ஆக்க வேண்டுமென்ற முயற்சியில் கிழக்கத்திய ரோம் ராஜ்யம் ஈடுபட்டது. இம் முயற்சியில் தீவிர ஆர்வம் காட்டிய சக்ரவர்த்தி ஜஸ்டீனியன்!

ஜஸ்டீனியன் (**Justinian**) தூய ரோமானியன் அல்ல! ஜஸ்டீனியன், அவனுடைய சிற்றப்பனுல் பட்டத்துக்குக் கொண்டு வரப் பட்டவன். ஜஸ்டீனியன் முப்பத்தெட்டு ஆண்டுகள் ஆண்டான். இழந்த மேற்கத்திய ரோம் ராஜ்யத்தை வென்று மீண்டும் ஒன்று படுத்தியதும், துண்டு துண்டாக சிதறிக் கிடந்த ரோமானிய சட்டங்களை முறைப்படுத்தித் தொகுத்ததும் அவனுடைய சாதனைகளில் குறிப்பிடத் தக்கவைகள் ஆகும்.

மாதவி! வேந்தர்களுக்கு விசேஷமான சிறப்பொன்று இருக்கிறது. ஒரு மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு நாட்டில் நல்லது ஏதாவது நடக்குமானுல் அந்தப் பெருமையெல்லாம் மன்னனையே சார்ந்து விடுகிறது. தாஜ்மஹால் கட்ட வேண்டுமென்று ஷாஜஹான் எண்ணியிருக்கலாம்; பொன்னும் பொருளும் கொடுத்திருக்கலாம். தாஜ்மஹாலின் பெயரோடு ஷாஜஹானை இணைத்துப் பார்க்கின்ற—பேசுகின்ற எவரும் அந்தக் கற் கோயிலைக் கலைக் கோயில் ஆக்கிய சிற்பி யார் என்பதை எண்ணிப் பார்ப்பதுண்டா? பணமும் அதிகாரமும் பெறுகின்ற சிறப்பைக் கலையும் கல்வியும் கூடப் பெறுவதில்லை என்பதைத்தானே இது காட்டுகிறது? இதே போலத்தான் மன்னன் ஜஸ்டீனியனின் காலத்திலும் எண்ணற்ற, கல்விமான்களும் சட்ட நிபுணர்களும் கூடி, இரவு பகல் பாராது உழைத்து, துண்டு துணுக்குகளாக இருந்த ரோமானிய சட்டம் முழுதையும் தொகுத்து முறைப் படுத்தி, சட்டவியலுக்கு என்றும் அழியாத அஸ்திவாரத்தை அமைத்தார்கள். ஜஸ்டீனியன் செய்ததெல்லாம் இந்த வேலையில் அவர்களை ஊக்கப்படுத்திப் பொருளுதவி செய்ததுதான். இச்செயலால் ஜனநாயகத்தின் ஜீவாதார சக்தியாகக் கருதப்படுகின்ற சட்டம், நீதி, நீதி மன்றங்கள் போன்ற விஷயங்களில் எல்லாம் ஜஸ்டீனியனின் பெயரும் தோன்றுகிறது.

சுமார் பத்து நூற்றுண்டு காலமாக ரோமானிய செனேட்டுகளும், சக்ரவர்த்திகளும் ஏராளமான சட்டங்களை ஆக்கி ஆக்கி அழித்துக்கொண்டே இருந்தார்கள். சட்டங்களை அமுல் செய்த மாஜிஸ்டிரேட்டுகள் அந்த சட்டங்களுக்குக் கொடுத்த விளக்கங்களும் வியாக்யானங்களும் எண்ணற்ற ஏடுகளாகக் குவிந்து கிடந்தன. இவைகளையெல்லாம் ஒன்ருகத் திரட்டி, வேண்டியவற்றைக் கொண்டும், வேண்டாதனவற்றை ஒதுக்கியும் சட்டத்தை உபயோகமான வகையில் ஒழுங்குபடுத்துவதென்பது சாதாரண வேலையன்று. ஓராண்டுக் காலத்திலேயே இந்த வேலை சிறப்புற நடந்தேறியது என்ருல், அதைச் செய்து முடித்தவர்கள் எவ்வளவு திறமைசாலிகளாகவும், காரியத்தில் கருத்தூன்றியவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதை எண்ணிப் பார்! டிரிபோனியன் (**Tribonian**) என்ற வழக்கறிஞர் ஒருவரின் தலைமையிலேயே இவ்வேலை சிறப்புற நடந்தேறியது! அதற்குமேல் மூன்ருண்டுகள் வேலை செய்து, சட்டங்களுக்கு தேவையான விளக்கங்களும் வெளியிடப்பட்டன.

மேற்கத்திய ரோம் ராஜ்யத்தை ஒன்றுபடுத்தும் பணியில் ஜஸ்டீனியனுக்கு வலதுகரம் போல் விளங்கியவன் பெலிசாரியஸ் (**Belisarius**) என்ற தளபதி. ஆனுல் நன்றிகெட்ட மனிதனை ஜஸ்டீனியன் காரியம் முடிந்தவுடன், அந்த தளபதியின் சொத்தைப் பறிமுதல் செய்து அவனையும் சிறையில் அடைத்துவிட்டான். எப்படியோ மேற்கு,கிழக்கு ஆகிய இருபெரும் ரோம் ராஜ்யங்களும் மீண்டும் ஒரே மன்னனின் ஆட்சிக்கு உட்பட்டன. ஆனுல் இந்த ஒருமைப்பாடு வெறும் போலி என்பது சீக்கிரமே புலனுயிற்று!

1—2—59 அன்று நடைபெற்ற "கண்ணதாசன் கவிதைகள்" வெளியீட்டு விழாவில் பொன்னுடை போர்த்திக் கவிஞரைச் சிறப்பித்த காட்சி!

மக்கள் வாழ்க்கையில் வளம் குன்றி வறுமை தலைதூக்க ஆரம்பித்தது. இந்நிலையில் பயங்கரமான பிளேக் நோய் ரோம் சாம்ராஜ்யத்தில் மட்டுமல்லாமல், ஐரோப்பா பூராவிலும், ஏன், உலகெங்குமே தோன்றி மக்களை பல்லாயிரக் கணக்கில் மாய்த்துக் கொண்டிருந்தது. போர்களாலும் பூசல்களாலும் வலுவிழந்திருந்த ரோம் சாம்ராஜ்யம்—குறிப்பாக மேற்குப் பகுதி—இப்பொழுது மேலும் பலஹீனமாயிற்று. வறுமையும் பிணியும் தாண்டவமாடும் நாட்டில் சட்டமும் ஆட்சியும் பலமுடையவைகளாக இருக்க முடியாது. இந்த நோயால் தினம் ஒன்றுக்கு பத்தாயிரம் மக்கள் மாண்டார்கள் என்றும், காய்த்துக் குலுங்கிய கதிர்களை அறுவடை செய்ய ஆளில்லாமையால், அவை நாசமாகிக் கொண்டிருந்தன என்றும், ரோம் சாம்ராஜ்ய வீழ்ச்சியைச் சித்தரிக்கும் கிப்பன் குறிப்பிடுகிருர்.

இதற்கிடையில் கிழக்கே பாரசீக சாம்ராஜ்யம் புதிய பொலிவோடு தலைதூக்க ஆரம்பித்தது. அலெக்சாண்டருக்குப் பின்னுல் ஸெலூகசும் அவன் சந்ததியாரும் பாரசீகத்தை மூன்று நூற்ருண்டுகள் ஆண்டார்கள். அதற்குப் பிறகு பாரசீகத்தைக் கைப்பற்றிய ஆரிய இனமான பார்த்தியன்கள் (**Parthians**) சுமார் இரு நூற்றைம்பது ஆண்டுகள் பாரசீக அரியணையில் அமர்ந்து ஆட்சி செய்தார்கள். அதற்குப்பின் புராதன பாரசீக மதமான ஸோரஸ் டிராயனிஸம் (**Zoroastrianism**) இ புத்துயிர் பெற்று, பாரசீகர்களின் கையை மேலோங்கச் செய்தது. கிறிஸ்துவ மதத்தை தழுவிய ரோம் சாம்ராஜ்யமும், பாரசீக சாம்ராஜ்யமும் அரசியல்—மத பிணக்குகளால் மோதிக்கொண்டன. இரண்டு ராஜ்யங்களுக்கும் மையமாக விளங்கிய ஆசியா மைனர், களமாயிற்று. இரு ராஜ்யங்களும் அப்பகுதியை வெல்லுவதும் தோற்பதும் அடிக்கடி நிகழும் சம்பவங்களாயின. இதனுல், ஆசியா மைனர் சாம்பல் மேடாயிற்று; நாகரிக வளர்ச்சி அங்கேயும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் தடைப்பட்டது. இப்படியாகப் பாரசீக, ரோம் மன்னர்கள் மதத்தை மையமாக வைத்துப் போரிட்டு வந்தபொழுது, கி. பி. 628-ல், 'ஒன்றேகுலம்; ஒருவனே தேவன்' என்ற குரல் இன்னெரு பகுதியிலிருந்து ஒலித்தது. நபிகள் நாயகத்தின் அந்தக் குரலை, இரண்டு சாம்ராஜ்யங்களும் முழுமூச்சோடு எதிர்த்தன. இந்த எதிர்ப்பு நீண்ட காலம் நீடிக்க முடியவில்லை. புது சகாப்தம் ஒன்று உலகில் உருவாகிக் கொண்டிருந்தது. முகம்மதுவின் கொள்கைகள் புதிய ஒற்றுமையையும் புத்துணர்ச்சியையும் வளர்க்க ஆரம்பித்தன.

இந்நிலையில், மாதவி, எனது அடுத்த கடிதத்தில் நீ நபிகள் நாயகத்தைப் பற்றி எதிர்பார்ப்பாய் என்பது எனக்குத் தெரியும். உன்னை நான் ஏமாற்றப் போகிறேன்! ஏமாற்றமும் நீ விரும்பி ஏற்றுக் கொள்ளுவதாகவே இருக்கும்!

அடுத்த கடிதம் எழுதும் போது நீயே அறிந்துகொள்ளுவாய், அதுவரையில் உன் ஆவல் ஆவலாகவே இருக்கட்டும்; அது ஆருடமாகிவிடவேண்டாம்!

அன்புள்ள

அகத்தியன்.

வெள்ளி 13—2—59 சென்னை

குற்றச்சாட்டு!

அகராதியிலேயிருந்து அழகுமிகுச் சொற்களைத் தேடிப் பிடித்து, பண்டித நேருவின் பாதம் நோக்கிப் பாமாலை தொடுக்கின்ற தேசீயவாதிகள் பதைபதைக்கும் செய்தி ஒன்று புறப்பட்டிருக்கிறது, இப்போது!

ஜனநாயகத்தின் தொட்டிலாக இந்திய உபகண்டத்தை மாற்றியவர் ஜகமெங்கும் புகழ்பெற்ற ஆசியஜோதி என இறுமாந்து கிடந்தவர்கள் அவர் இமாலயத் தவறொன்றின் காரணகர்த்தா என்ற பரபரப்பான செய்தியறிந்து திடுக்கிடுகின்றனர்.

பாரதத் தாயின் தலைமகனும் — அவர்தான், பெற்றெடுத்துப் பேணி வளர்த்த அத்தாயின் புஜங்கள் போலிருந்த பகுதிகளை வெட்டி வீழ்த்த வித்தூன்றினர் என்ற கண்டனக் கணை ஒன்று எழும்பியிருக்கிறது, இப்போது!

இந்தியாவைக் கூறுபோட்டானே வெள்ளையன்—பாக்கிஸ்தான் என்ற ஒரு பீத்தி நாட்டின் அழகைக் கேட்டுவிட்டு விலகி ஓடி விட்டதே—இப்படி எண்ணி எண்ணி மாய்ந்தவர்கள், இன்று அதன் காரணம் என்னவென்று அறிகிறார்கள்.

எங்களுக்கென்று தனி இடத்தைப் பிரித்துத் தா — அல்லது உலைக்களத்திலிருந்து படைக்கலன் எடுத்துப் போர்க்களத்திலே குதிப்போம் என்ற முஸ்லீம் லீகின் பாசறைக் குரல் கேட்டா பாக்கிஸ்தான் பிரிந்தது? இல்லையாம்!

பாக்கிஸ்தான் பிரிந்ததற்கு—பாரதத்தாய் வெட்டுண்டதற்கு—இவைகள் அல்லவாம் காரணங்கள்!

பிறகு...?

"பண்டித நேரு செய்துவிட்ட மாபெரும் தவறுதான் இந்த மாறாத களங்கத்திற்குக் காரணம்"!

யார் சொல்லியது இப்படி?

வகுப்புக் கலவரத்தால் வாழும் முறை கெட்டு—கருத்துக் குருடர்களின் கட்டாரிகளுக்குப் பயந்து—பாக்கிஸ்தானிலேயிருந்து ஓடிவந்து—பாரத மண்ணிலே பல கோடி ரூபாய்களை விழுங்கியபடி அண்டிக் கிடக்கிறார்களே, அந்த அகதிகளா? அல்ல; அல்ல!

ஆசியஜோதியின் பக்கத்திலேயே இருந்தவர்; ஒளி குறைந்த நேரத்திலே அதற்கு எண்ணெ ஊற்றிச் சுடரேற்றியவர்—

'சமாதானப் புறா' சோர்ந்துபோன நேரத்திலே உணவளித்து உதவி செய்தவர்; காற்றோடு போட்டியிடும் வேகத்தோடு பறக்க ஆக்கம் ஊட்டியவர்—

இந்திய விடுதலைக்குப்பின் -- இந்த உலகிலிருந்தே அவர் விடுதலை பெறுகின்றவரை அமைச்சராயிருக்கும் அருகதை பெற்றிருந்த காந்தீயவாதி—

மௌலானா அபுல்கலாம் ஆசாத்—

அவர்தான் சொல்லுகிறார், பண்டிதர் செய்த பயங்கரப் பிழைதான் பாக்கிஸ்தானை வெட்டியது என்று!

பண்டிதரின் பாதந்தாங்கிகள் அகலக் கண் திறக்கிறார்கள்; இது உண்மையா—என்று விழியாலே கேட்கிறார்கள். விற்பனைக்கு வந்திருக்கும் புதிய நூல் ஒன்று இந்தக் குற்றச்சாட்டை அறுதியிட்டுக் கூறுகிறது!

"இந்தியா சுதந்திரம் அடைகிறது" என்ற தலைப்பில் ஆசாத்தின் சுய சரிதையின் முதல் தொகுப்பு இப்போது ஆங்கிலத்தில் வெளியாகி இருக்கிறது. அதிலேதான் பாக்கிஸ்தான் பிரிவினையின்போது காங்கிரஸ் தலைவர்கள் தங்களது பலத்தைப் பாழான வழியிலே பயன்படுத்தியதாக— பண்டித நேரு 'அபத்த'மான கொள்கைகளைக் கடைப்பிடித்ததாக அவர் குறிப்பிடுகிறார்.

காங்கிரசிலே அன்று நிறைந்து கிடந்த எதிர்ப்பாளர்களுக்கிடையே நடைபெற்ற சம்பவங்கள் ஒன்றை அவர் விவரிக்கிறார்:

"நேரு நேசித்து வந்த அபத்தமான கொள்கைதான் 1937-ல் மடிந்து கொண்டிருந்த முஸ்லீம் லீக் மீண்டும் உயிர் பிடித்து முன்னேற உதவியது...

"1937-ம் ஆண்டு சட்டசபைகளுக்கு நடைபெற்ற பொதுத் தேர்தல் முடிந்த பிறகு அந்த முதல் தவறு நடந்தது. உத்தரப் பிரதேசம், பம்பாய்—ஆகிய மாகாணங்களில் எல்லாம் முஸ்லீம் லீக் படுதோல்வி அடைந்தது! நாட்டுப் பிரிவினையை விரும்பாத மக்கள் அவர்களுக்கு நல்ல பாடம் கற்பித்தனர்!

"ஆனால் உத்தரப் பிரதேசத்தில் முஸ்லீம் லீக் கூட்டு மந்திரிசபை அமைக்க ஒப்புக் கொண்டது. அவர்களின் அன்றைய பெரும் தலைவர்களான கலிக் குஸ்மான், நவாம் இஸ்மாயில்கான் — ஆகிய இருவரையும் மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று வாதாடியது. அவர்கள் இருவரும் காங்கிரசின் எல்லாத் திட்டங்களையும் ஏற்றுக் கொள்வதாக ஒப்புதல் கடிதமும் தந்தனர்.

"ஆனால், லீகின் சார்பாக 6 உறுப்பினர்களே இருந்ததால், மந்திரி சபையில் இரண்டு இடங்கள் தரமுடியாது என்று லீகுக்கு நேரு கடிதம் எழுதிவிட்டார். இது மிகமிக வருந்தத்தக்கது. அதன் பிறகு லீக் மந்திரிசபையில் சேர முடியாது என்று அறிவித்து விட்டதில் ஆச்சரியம் எதுவும் இருக்கமுடியாது!

"இது மிகவும் துரதிஷ்டம் நிறைந்த சம்பவமாகும். அன்று முஸ்லீம் லீகின் ஒத்துழைப்பை ஏற்றுக் கொண்டிருந்தால், யதார்த்த நடைமுறைகளை வைத்து லீக் காங்கிரசோடு இணைந்திருக்கும். நேருவின் செய்கை செத்துவிட்ட லீகிற்குப் புத்துயிர் தந்துவிட்டது. ஜின்னா இந்த அரிய சந்தாப்பத்தை முழுக்க முழுக்கப் பயன்படுத்திக் கொண்டுவிட்டார்...."

— நேருவின் ஏதேச்சாதிகாரப் பண்பால் வந்த விளைவாகும் இது—என்று குறிப்பிடுகிறார் ஆசாத்!

இன்னும் அந்த ஏட்டிலே இந்தியா துண்டாடப்பட்ட கோடுமைக்கு நேருவின் தான்தோன்றித்தனமான போக்குதான் காரணம் என்றும் அவர் விவரிக்கிறார்.

நேருவின்மேல் அவர் கொண்டிருந்த பாசத்திற்கும் நேசத்திற்கும் பின்னால் மறைந்து கிடந்த உளப்பூர்வமான அதிருப்தி; அவரது மறைவுக்குப் பின் இன்று வெளிப்படுகிறது.

வாழ்ந்த காலத்தில் அவரை 'நேருவின் வலக் கரம்' என்றார்கள்; ஆனால் தன் உள்ளத்து வேதனைகளை அவர் வெளியிடும் சக்தியற்றிருந்தார், இன்று நேருவுக்கு எதிரிலே கைகட்டி வாய் புதைத்து நிற்கும் காங்கிரசார் போலவே!

கோட்டைக்குள் குமுறுகின்ற குழப்பங்கள் குறித்து வெளியிலுள்ளோர் கவலைப்படமாட்டார்கள். நேருவின் தவறால் பாக்கிஸ்தான் பிரிந்தது—இதுதான் ஆசாத்தின் சுயசரிதையிலிருந்து நாட்டுக்குக் கிடைத்திருக்கிற புதிய செய்தி!

ஆக, இதன்மூலம் அதிகார இச்சை, பகைவருக்கும் நீதி வழங்கும் பெருந்தன்மை இழந்த பண்பு, சகிப்புத்தன்மை இல்லாமை—போன்ற பண்டிதரின் குணாதிசயங்கள் இப்போது மேலும் விளம்பரமாகின்றன.

நேரு அன்று பெருந்தன்மையோடு நடந்து கொண்டிருந்தால் பாக்கிஸ்தான் பிரியாமல் இருந்திருக்குமா—என்பது வேறு பிரச்னை. மீண்டும் அவர் தவறு செய்வதால்தான் திராவிடநாடு கிடைக்கப்போகிறது—என்று நாமும் நம்பிக் கொண்டிருக்கவில்லை.

எப்படியோ இன்று பாக்கிஸ்தான் நிலைபெற்ற உண்மையாகி விட்டது.

—நாம் இதன்மூலம் கவனிக்க வேண்டியது பண்டிதரின் குணாதிசயத்தைத்தான்!

அவரை ஜனநாயகவாதி என்று கூறுகிறார்கள். ஆனால் அவரோ ஆதிக்கவெறியராகி பெருந்தன்மையோடும், சகிப்புத்தன்மையோடும் நடந்துகொள்ளத் தவறிவிட்ட சோகக் கதையைக் கண்ணீரால் எழுதியுள்ளார், ஆசாத்!

பண்டிதரை ஒரு அரசியல் தீர்க்கதரிசி என்று புகழ்கிறார்கள். ஆனால் அவரே தான் செய்யும் தவறு ஒன்று பாக்கிஸ்தானாக நாளை உருவெடுக்கப் போகிறது — என்கிற உண்மையை மறந்து விட்ட 'பெரிய மனிதராக' மாறி விட்டாரே என்று கவலைப்படுகிறார், ஆசாத்!

செத்தும் கொடுத்தான் சீதக்காதி—என்பார்கள். ஆனால் அபுல்கலாம் ஆசாத் செத்த பிறகு கொடுத்திருப்பது பண்டிதருக்குக் கசப்பாக இருந்தாலும்; அது நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய மகத்தான உண்மை என்பதை யாரும் மறக்க முடியாது! ∴

நாமெல்லாம் ஒரே குடும்பம் - ★ கதிர் உண்டு; பதர் இல்லை!

[முதல் பக்கத் தொடர்ச்சி]

தம்பிமார் ஆயிரம் ஆயிரமாய் உண்டு! அண்ணன் நீட்டிய விரலில் பாய்வர்—காட்டிய வழியில் போவர்—ஈட்டியும் வாளும் வரினும் இமை கொட்டோம் என்பர்...”

இப்படிப் புகழ்மாலைகள் இந்தக் குடும்பத்துக்கு ஏராளம்; ஏராளம்!

ஒவ்வொரு வீட்டிலுமுள்ள இளையவர்கள், தங்கள் தாயின் வயிற்றில் உதித்தவர்களை உடன் பிறப்பாக எண்ணுமல், தங்களுக்கெல்லாம் உரிமையும் உறவு முறையுங் கொண்ட மூத்தவர் ஒருவர் இருக்கிறார்; அவரைத்தான் வாய் நிறைய அழைக்கிறோம் “அண்ணு” என்று என நினைத்துப் பூரிப்படைகிறார்கள்!

வயது எண்பதுக்கு மேலாகிறது — தள்ளாடும் வயது — பல்லாடும் பருவம் — அதோ தண்டூன்றித் தடுமாறி நடக்கும் அந்த முதியவருக்கும் ஒரு அண்ணன் உண்டு—ஆனல் வயதில் அவருக்கு இளையவர்!

இப்படி இளையவர், பெரியவர் அனைவராலும் அண்ணு-அண்ணு என்று அழைக்கப்படும் குடும்பத்து மூத்தவரின் புன்னகையால் —அரவணைப்பால் — வளர்ந்து வரும் வீடு! செழித்து வரும் குடும்பம்!

உலகத்தில் எத்தனையோ இயக்கங்கள் தோன்றியிருக்கின்றன—தோன்றிக்கொண்டு மிருக்கின்றன—எந்த இயக்கத்திலுள்ள தோழர்களிடமும் இந்த அளவு சொந்த பந்தத்தை யாரும் கண்டதாகக் கூறிட இயலாது.

கழனியில் களைகள் முளைப்பது இயல்பு! நாம் குறிப்பிடுவது நெற் கதிர்களை! அந்தக் கதிரில் இங்கே பதர் இருந்ததில்லை! கனிவும் அன்பும் கட்டிக் காக்கும் குடும்பம் இது!

இந்தப் பாசத்தை முறிக்க யார் யாரோ முயன்று பார்த்து மூக்கறுபட்டு விட்டார்கள். இன்னும் சிலர் அந்த துரோகத்திற்குத் துணை போய்க் கொண்டிருக்கிறார்கள். எத்தகைய சக்தியாலும் இந்தக் குடும்ப கௌரவத்தை மூளியாக்கிவிட முடியாது என்பதற்கு அடையாளமாகத்தான்—அறைகூவல் விடுக்கும் தோரணையில் புதுக் கோட்டைப் பொதுக் குழு நடந்தது!

புதுக்கோட்டை நிகழ்ச்சிகளை நாடு உன்னிப்பாகக் கவனித்தது!

வெறும் அப்பட்டமான அரசியல் இயக்கமாக இல்லாமல், எத்தகைய தீவிரமான கொள்கைகளையும் குடும்ப ரீதியில் வகுத்திடும் நமது கழகம், பொதுக் குழுவிலே நிறைவேற்றிய பற்பல தீர்மானங்களுக்கும் - பேசப்பட்ட கருத்துக்களுக்கும் — இடையிலே ஓடுகிற இழைபோல நமது குடும்ப பாசம் பற்றிய உணர்ச்சி மிகுந்த குறிப்பையும் நாட்டுக்கும் நமது எதிரிகளுக்கும் உணர்த்திடத் தவறவில்லை.

“ கழகத் தோழர்கள், ஒரே குடும்பத்தவர் என்ற பாசத்தை நாளும் வளர்த்துக்கொண்டு இலட்சிய வெற்றிக்காக உறுதியோடு பாடுபட வேண்டும்—எதிர்காலத்தில் கழகம் சாதிக்க வேண்டிய மகத்தான காரியங்களுக்கு வேறெல்லாவற்றையும் விட இந்தக் குடும்ப பாசம் தான் அதிகம் தேவை!”

—என்ற வாசகங்களை அண்ணு அவர்கள் பொதுக் குழுவில் வெளியிட்டபொழுது அவர் கண்களிலும் வீற்றிருந்த அத்தனை பேர் கண்களிலும் பனித்துளிபோல் கண்ணீர் எட்டிப் பார்த்து மீண்டும் பதுங்கிக் கொண்ட காட்சியில் அல்லவா உண்மையான குடும்ப பாசம் இருக்கிறது!

தாயக விடுதலைக்கு நாம் தீட்டும் போராட்டத் திட்டங்கள் குடும்பப் பாசத்தோடு இழைந்து எழுவதால்தான் எந்த நாட்டு விடுதலைப் போரிலுமில்லாத உளமார்ந்த உணர்வு பொங்கியெழுகிற நிலையைக் காண முடிகிறது.

புரட்சிகள், புதிய அரசுகளைத் தோற்றுவிக்கலாம். அந்த அரசு வலுப் பெறவும் நாடு வளம் பெறவும் விடுதலைத் தலைவர்களிடம் ஒரே குடும்பம் என்ற எண்ணம் மலர்ந்திட வேண்டும். அந்தச் சிறப்பு இங்கு தவிர வேறெங்கணுமில்லை. அதனல் வெற்றி வாய்ப்பும் வெகு தூரத்தில் இல்லை!

அந்த நம்பிக்கையை நமக்கு புதுக் கோட்டை அளித்திருக்கிறது—பொதுக்குழு நடந்த புதுக்கோட்டை மட்டுமல்ல; நமது சட்ட மன்ற உறுப்பினர்கள் புகுந்துள்ள கோட்டையும் அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தவே செய்கிறது.

நாடே நமது வீடு!

நாமெல்லாம் அந்த வீட்டில் வாழுகின்ற குடும்பத்தினர்!

நமது குடும்பம்; நாவாய்களை நானிலமெங்கும் அனுப்பி கீர்த்திக் கொடி பறக்கவிட்ட குடும்பம்!

நமது வளங்கண்டு வாய் பிளந்து நின்றான் யவன நாட்டான்!

நமது வீரம் பற்றிப் பேசாத வரலாறு இல்லை!

நமது இலக்கியம் நமது குடும்பத்தின் ஒளிக் கிரீடம்!

எகிப்தும், ரோமும் இங்கிருக்கும் முத்துக்களுக்கு முத்தமளித்தன!

நமது பாட்டனும், பாட்டியும்—நிறைந்த செல்வாக்கோடு இந்தக் குடும்பத்தில் வாழ்ந்தனர்!

நாமோ இன்று இழந்த பெருமையை மீண்டும் பெற்றிடப் போர்க்கோலம் பூண்டு நிற்கின்றோம்.

★

விழி யோட்டும் திசையெல்லாம் விரோதிகள் நிற்கின்றனர்!

திரும்பிய பக்கமெல்லாம் தீயோரின் நடமாட்டம்!

நமது கைகளோ கட்டப்பட்டிருக்கின்றன!

கால்களிலும் விலங்கு!

பகையோ நெருங்கி வருகிறது!

படை திரண்டு வருகிறது!

குமுறுகிறது நெஞ்சம்!

எதிரியின் குத்தீட்டி நமது மார்புக்கு நேரே!

குடும்ப பாசம் பீறிட்டு எழுகிறது!

அதோ எதிரிப் படை வந்து விட்டது!

அந்தோ; அதிலே...

சில விபீஷணர்கள்!

சில அனுமார்கள்!

சில சுக்ரீவர்கள்!

அந்தக் காட்டிக் கொடுக்கும் கயவர்களைக் கண்டதும் கண்கள் குளமாகின்றன!

கண்ணீரைத் துடைக்கவும் கையில்லை! கையிலே விலங்கு!

குடும்ப பாசம் மேலும் மேலும் பீறிட்டுக் கிளம்புகிறது!

எதிரிப் படை நம்மை நன்ருகச் சூழ்ந்து கொண்டது!

அதோ, ஒரு விபீஷணன்... மறைந்திருந்து தாக்குவதற்கு முயலுகிருன்!

வீட்டுக்குத் தீயிடுகிருன் ஒரு துரோகி!

தாயைக் கொல்ல வாள் தூக்குகிருன் ஒரு வஞ்சகன்!

அம்மா!

அம்மா!!

தாய்ப் பாசம் — தாங்காத குடும்பப் பாசம்—மேலும் மேலும் பொங்கிப் பொங்கிப் பீறிட்டுக் கிளம்பி விடுகிறது!

விலங்கு உடைபடுகிறது!

கால் தளை அறுபடுகிறது!

குடும்பமே பாசறையாக மாறுகிறது!

குடும்பமே களத்தில்!

குடும்பமே தியாகத் தீயில்!

குடும்பமே விடுதலைப் போரில்!

குடும்பம் வெல்கிறது குடும்ப பாசம் வெல்கிறது! குள்ள நரிகளாம் ஏகாதிபத்தியப் பித்தர்கள் ஓடுகிருர்கள்! நமது குடும்பக் கொடி உயரப் பறக்கிறது.

★

இப்படி ஒரு இன்ப நினைவை—எதிர் காலத்து நிகழ்ச்சியைப் புதுக்கோட்டைப் பொதுக்குழு படம் பிடித்துக் காட்டியிருக்கிறது!

“வாழ்க, அந்தக் குடும்ப பாசம்—வெல்க தாயகம்!” என அண்ணுவுடன் சேர்ந்து அனைவரும் முழங்குவோமாக!

பொதுக் குழுக் கூட்டத்தில் ஒரு பகுதி!

★ புலிமெச்ச வாழ்ந்த இனத்தார் புலிவாயில் புகுந்தனரோ? ★

பிறந்த மண்ணுக்குத் திறந்த கதவு!

அது வந்தாரை வாழ்விக்கும்; 'வாழ்க' வென வாழ்த்தும்! ஆனல் சொந்த மண்ணுக்கு உரியவரையோ சோகத்தின் உருவமாக மாற்றும்!

.—இது நற்றமிழர் அரசாண்டு நானிலத்தில் புகழ் பெற்ற நமது நாட்டில்!

ஆனல், பிழைக்கச் சென்ற இடங்களிலோ உழைக்கப் பிறந்த இனத்திற்கு மதிப்பில்லை; மனதிலோ அமைதியில்லை!

சிங்களம் — இன்று செழித்துக் குலுங்கும் சிங்கார பூமி! ஆனல் அதன் வளத்துக்குப் பின்னலே உரமாகக் கிடக்கிறது, இலட்சக் கணக்கான தமிழர்களின் மிருக உழைப்பும், இரத்தப் பெருக்கும்!

தண்ணீரையும் வியர்வையையும் ஒன்ருக்கி — நன்னீர் இதுவென்று பாய்ச்சி வளம் காட்டிய நிலத்திலே பலனறுக்க வந்த கொடுவாள்கள், அவர்களது கழுத்தையறுக்கவும் துணிந்தன!

கொடுமை இதுவென்று குமுறினர்—அடிமையினும் கீழான அற்பப் புழுவென்று தூற்றப்பட்டனர்!

எம் இனப் பெருமையின் சிறப்பறிவீர்; மதிப்பளிப்பீர் — என்று கெஞ்சினர்! நடைப் பிணங்களே! நாடற்ற பிறவிகளே! உயிரற்ற கூடாக உங்கள் உடல் குவிக்க வேண்டும்; ஆழக் குழியொன்று வெட்டுவீர் அதற்கு என்று ஆணை பிறந்தது அப்போதும், ஆணவக்காரர்களிடமிருந்து!

கல்லுருக் கொண்ட சிலைகள் கூட கண்ணீர் சிந்தும்—கொல்லும் குணம் படைத்த பொல்லா விலங்கும்கூட கருணை காட்டும்!

ஆனல், சிரித்த முகத்தோடு தமிழனென்று தலை நீட்டினல், அவன் சிரம் கொய்யத் துணிந்தது பண்டா சர்க்காரின் பக்க பலம் கொண்ட மொழி வெறி— ஒரு நாள் தமிழன் படை மோதி வெற்றிக் கொடி தூக்கிய சிங்களத்திலே!

உழைப்பைக் கொட்டியோரின் உதிரம் கொதித்தது; ஆனல், உண்டு கொழுத்தோர் குதித்தனர், கொலை வெறியில்!

வகுப்புக் கலவரம் அங்கே பிழைக்கச் சென்ற எத்தனையோ தமிழ்க் குடும்பங்களின் வாழ்வையே வகுத்தெறிந்து விட்டது, கூறு கூருக!

சாவுக்குப் பலியான தமிழர்கள் ஏராளம்!

தீயிற்கு இரையான குடிசைகள் அநேகம்!

தீ நாக்குத் தீண்ட முடியா தமிழச்சியின் கற்பைப் பேய்க்குணம் கொண்டவர்கள் பாழ்படுத்தி விட்ட கதைகள் எண்ணற்றவை!

புலி நகங்களாலும் கோரப் பற்களாலும் பிருண்டப்பட்டு, கிழித் தெறியப்பட்டு விட்டனவே தமிழினத்தாரின் வாழ்வு— அதற்குப் பதில் என்ன சொல்லுகிறீர்?

—"இங்கிருக்கும் எத்தர்கள் கேட்கவில்லை!

நடுத் தெருவிலே நிற்கிருேம், நாதியற்றவர்களாக! உடலை மறைத்துக்கொள்ள ஒரு முழ ஆடையின்றி குன்றிப் போகிருேம், உலகத்துக்கே மானத்தைப் போதித்த இனத்தினர்!

—என்று பண்டாவை நோக்கிக் கதறினர்கள், பிறந்த இடத்தை நோக்கிக் கை நீட்டிக் களைத்தவர்கள்!

ஆனல், அங்கிருந்தும் பதில் கிடைத்துவிட்டது இப்போது, அரசாங்க உதவியேதும் கிடையாது பாதிக்கப்பட்டவர்களுக்கு —என்று! வகுப்புக் கலவரத்தால் வாழ்வை இழந்தவர்களுக்கு நட்ட ஈடு தருவதற்கு என் நாடென்ன பொற்குவியலின் பிறப்பிடமா—என்று கேட்டுவிட்டார் பண்டார நாயகா!

வாழச் சென்ற இனத்தவர் குடும்பங்கள் பாழான நிலையில் பரிதவிக்கின்றன!

அத்தகைய குடும்பம் ஒன்றின் சோக வரலாற்றை இங்கே படம் பிடித்துக் காட்டுகிருர், இலங்கையிலே வாழுகின்ற தோழர் ஒருவர்.

* * *

சூது வாது அறியாத அந்தப் பிஞ்சுக் குழந்தைகள், "எங்கள் அப்பா ஹிங்குரக்கொடைக்குப் படிப்பு சொல்லித் தரப் போய் விட்டார்" என்று தான் மழலை பொழிந்து பெற்ற அன்னையையும் சுற்றத்தாரையும் மகிழ்வித்தார்கள் — அது அப்போது!

ஆனல் இப்போது...?

"அப்பாவை வெறியர்கள் வெட்டிப் போட்டார்கள்"—கலங்கிய கண்களோடு நலமிழந்த குரலில் கூறுகின்றன அந்தக் குழந்தைகள். பிஞ்சு உள்ளங்கள் பேதலித்து விட்டன.

வஞ்சினம் அங்கே வளர்கிறது என்பதற்கான அறிகுறி இது. இன்னும் சில ஆண்டுகள் கழிந்த பின்னர், உள்ளடக்கி வளர்ந்து வரும் அக்குமுறல் வெளிப்படாமல் என்ன ஆகும்?

"அப்பாவை ஆடு மாடுபோல அறுத்தெறிந்த அக்கிரமக்காரர் இந்த மண்ணிலேதான் வாழ்கிருர்கள், கண்களே!" என்ற சேதியைப் பெற்றவள் ஊட்டும் ஒவ்வொரு வாய் கஞ்சியோடும் சேர்த்துக் கொடுத்துப் பிள்ளைகள் தக்க பருவம் அடைந்ததும், "என் கடமை முடிந்தது; உங்கள் கடமையை இனி நீங்கள் செய்யலாம்" என்று ஆணையிட வேண்டாம்; அனுமதி மட்டும் தந்து விட்டாளேயானல் என்ன நடக்கும்?

எரிமலை வெடித்த நிலை பிறக்காதா? பிரளயமே கூட ஏற்படாதா? இரத்த வெள்ளத்திலே செத்த உடல்கள் மிதந்து செல்லும் பயங்கரக் காட்சி தென்படாமல்போய் விடுமா? இலங்கையை விட்டால் போக்கிடமற்ற 60 லட்சம் மக்கள் கூட்டம், பேய்க்குரல் எழுப்பி, "போதும் போதும்" என்று கெஞ்சிக் கூத்தாடி உயிருக்காக மன்ருடிக் கொள்ளும் நிலைமை வராதா?

வரத்தான் செய்யும். அதற்கான வீரமும் வைராக்கியமும் தமிழனிடம் இல்லாமலில்லை. காலத்துக்கேற்ற விவேகமும் அவனிடம் இருக்கிறது. அளவுக்கு மிஞ்சிய பொறுமையும்கூட அவனிடம் குடிகொண்டு இருக்கிறது. அதனல் யாரும் அஞ்சவேண்டியதில்லை!

பொறுமை எந்த வகையில் செயல்படுகிறது என்பதற்கும் ஆளவந்தார் பொறுமைசாலிகளுக்கு அளிக்கும் பரிசு என்ன என்பதற்கும் விளக்கம் அதிகம் வேண்டியதில்லை.

சரவணமுத்து கந்தப்பா! யாழ்ப்பாணம் கரவெட்டிக் கிராமத்தில் குடியேறியவர். ஐந்து குழந்தைகளின் அருமைத் தந்தை. வள்ளிப்பிள்ளையின் வாழ்க்கைத் துணைவர். பள்ளிச் சிருர்களுக்கு எழுத்தறிவிக்கும் உயரிய ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டவர். கடைசியாக ஹிங்குரக்கொடை என்ற இடத்தில் அரசினர் தமிழ்ப் பாடசாலையில் பணி செய்துகொண்டிருந்த சமயம், இனக் கலவரம் வந்தது. அத்தோடு அவருக்கு சாவோலையும் சேர்ந்தே வந்தது!

'தமிழ்...தமிழ்' என்று தமிழுக்காகப் பேசினர். 'தமிழன்...... தமிழன்' என்று தன்மான முழக்கம் செய்தார். 'தமிழ்ப் பண்பாடு...தமிழ்ப் பண்பாடு' என்று அந்தப் பண்பாட்டுடன் வாழ்ந்தார். அதனலேயே இழந்தார், தமது இன்னுயிரை.

பல காலமாக இந்தத் தமிழுணர்ச்சி மிக்க தமிழர்மீது, பழி வாங்கும் ஒரே நோககத்துக்காக 'கண்' வைத்து வுந்த கயவர்கள் இனக். கலவரம் வந்ததும் சந்தர்ப்பத்தைத் தமக்கு சாதகமாக்கிக் கொண்டார்கள்.

ஹிங்குரக் கொடையில் இருந்த தமிழாசிரியர் கந்தப்பாவைக் காப்பாற்ற அங்கு யாரும் முன் வரவில்லை. முடமான ஆட்டைத் தோள்மீது சுமந்து அதன் துயர் துடைத்த கருணை வள்ளல் புத்தரைப் போற்றி, அவர் புண்ணிய நெறியைப் பின்பற்றி நடந்து வருவதாகப் பெருமையடிக்கும் புண்ணியவானகளுக்குக் கந்தப்பாவின் உயிர் கால், தூசுக்குச் சமானமாகிவிட்டது. அணுவணுவாகக் கந்தப்பாவைச் சாக

[தொடர்ச்சி பக்கம்—8]

பொதுக் குழுவில் மதுரை முத்து பேசுகிறார்.

'தவறு செய்வது மனித இயல்பு;
அதை மன்னிப்பதுதான்
தெய்வ இயல்பு

—என்று ஆங்கிலத்திலே ஒரு பழமொழி உண்டு. வாழ்வில் தவறு செய்யாத மனிதர்களையே நாம் பார்க்க முடியாது. அதைப் போலவே செய்த தவறை ஒப்புக் கொள்ளும் பண்பு கொண்டவர்களும் மிகச் சிலர்தான் இருப்பார்கள்.

தனிப்பட்ட முறையிலே ஒருவன் தவறு செய்வானேயானால்,

திறமையைப் புறக்கணித்து விட்டுத் தன் சொந்தக்காரர்களுக்குப் பதவியைத் தேடிக் கொடுக்க முன்வருகிறவர்கள் -

— இப்படிப்பட்ட குணம் கொண்டவர்களது தலைமையின் கீழே மனித சமுதாயம் எத்தனையோ சீர்கேடுகளை அடைந்திருக்கிறது.

லங்களுடன் அவருக்கு நெருங்கிய தொடர்புண்டு — டி. டி. கிருஷ்ணமாச்சாரியாருக்கும் அவர் உதவியாக இருந்திருக்கிறார்!

இந்தச் செயல்களின் மூலமாக அவர் பங்களாக்கள் சிலவற்றைத் தன் பெயரில் வாங்கியிருக்கிறார்; சில

—அவர் பண்டித நேருவுக்கு எழுதிய ராஜினாமாக் கடிதம் இப்போது பத்திரிகைகளில் எல்லாம் வெளியாகியிருக்கிறது.

அந்தக் கடிதத்தை மத்தாய் பண்டிதருடைய அனுமதியுடனேயே பிரசுரித்திருக்கிறார்.

அதைப் பிரசுரிக்கப் பண்டிதர் எப்படி அனுமதித்தார் என்பதுதான் இப்போது எழுந்துள்ள பிரச்னை!

ஏனெனில், அந்தக் கடிதத்தில் விரும்பத்தகாத சில தகவல்கள் அடங்கியிருக்கின்றன.

"உணர்ச்சிக்கு அடிமையானேன்; தவறுகள் பல செய்துவிட்டேன்!"

அதன் விளைவுகள் அவனையே பாதிக்கும்; அதனால் தாக்கப்படுகிறவன் அவனாகத்தான் இருப்பான்!

ஆனால், பொது வாழ்க்கைத் துறையிலே ஈடுபட்டிருப்போரும்—ஒரு நாட்டின் சகல காரியங்களையும் தன்னுடைய சுட்டுவிரல் அசைவினாலும் கடைக்கண் பார்வையினாலும் இயக்கி வைத்துக் கொண்டிருக்கும் பெரிய மனிதர்களும்—சிறிய தவறுகள் எதையாவது செய்தால்கூட அதன் விளைவுகள் அவர்களைவிட அந்த நாட்டுச் சமுதாயத்தையும்—நிகழ் காலத்தோடு சேர்த்து வருங் காலத்தையும் பாதித்துவிடும் பரிதாப நிலையைக் காணுகிறோம்.

அதனால்தான் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது மக்கள் மன்றம் மிகவும் கண்காணிப்போடும், பொறுப்புணர்ச்சியோடும் நடந்து கொள்ள வேண்டுமென்று சரித்திரம் நீதி போதித்துக் கொண்டே வந்திருக்கிறது.

முன் கோபக்காரர்கள்—

நா காக்க முடியாதவர்கள்—

பதவி வெறியர்கள்—

நல்ல விமர்சனத்தை எதிர்ப்பவர்கள்—

விநாடிக்கு விநாடி தன்மை மாறுகிறவர்கள்—

புகழ்ச்சியை மட்டும் விரும்பி கெடுபிடியை நழுவ விடுகிறவர்கள்—

இந்தப் பின்னணியின்கீழ் இப்போது கனம் பண்டித நேரு அவர்களுடைய குண நலன்களைக் கவனிப்போம்.

சென்ற சில நாட்களாக டெல்லி வட்டாரத்திலே 'மத்தாய் விவகாரம்' என்ற பிரச்னை ஒன்று அடிபட்டு விடுகிறது.

அந்த பிரச்னைக்குரிய எம். ஓ. மத்தாய் என்பவர் சாதாரண மனிதரல்லர்; பிரதமர் நேருவின் அந்தரங்கச் செயலாளராவார். அவர்தான் திடீரென்று தன்னைப் பதவியிலிருந்து விலகிக் கொள்ள அனுமதிக்குமாறு பண்டித நேருவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

அவர் ராஜினாமா செய்ய விரும்புவதற்குக் காரணம் என்ன என்பதில்தான் இந்த விவகாரத்திலிருக்கின்ற சிக்கல் தென்படுகிறது!

மத்தாயினுடைய தாயாரின் பெயரில் ஒரு அற நிறுவனம் நிறுவப்பட்டிருக்கிறது. ஆனால், பெருஞ் செலவில் அப்படியொரு நிறுவனம் அமைக்கப்பட்டது குறித்து அவர்மேல் அபாண்டப் பழிகள் அநேகம் சுமத்தப்பட்டிருக்கின்றன!

முதலில் சாதாரண 'டைப்பிஸ்டாக' வேலைக்கு அமர்ந்தவர், மத்தாய்!

ஆனால், அவரோ குறுகிய காலத்தில் 'பலவழி'களில் ஈடுபட்டுப் பணமுதலைகளுடன் தொடர்பு கொண்டார்!

பிர்லா முதலிய வணிகத் திமிங்கலங்களுடன்

திராட்சைத் தோட்டங்களையும் வாங்கியிருக்கிறார்; அதோடு, அன்னையின் பெயரால் மேலே குறிப்பிட்ட அற நிறுவனம் ஒன்றையும் நிறுவி 25 இலட்சம் ரூபாய்வரையில் சேர்த்துக் கொண்டார்!

மேலும், அமெரிக்க நாடுகளுடன் கூட அவருக்கு ரகசியத் தொடர்புகள் உண்டு!

—இப்படியாகக் கம்யூனிஸ்ட் ஏடுகள் ஆதாரத்துடன் குற்றம் சாட்டியிருக்கின்றன.

"இத்தப் பிரச்னைக்கு வித்தூன்றிய அந்த அற நிறுவனத்திற்கு மத்தாய் குடும்பத்தாரின் பெயரைச் சூட்டியதற்கு நான்தான் காரணம்! இந்த நிறுவன விவகாரத்திற்கும், மத்தாய்க்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது!"-என்று அந்த நிறுவனத்தின் தலைவராக இருக்கின்ற ராஜகுமாரி அமிர்தகௌரி பிரதமர் நேருவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறாராம்!

ஆனால், தன்மீது அபாண்டப் பழி சுமத்துவதாகக் குறிப்பிடுகிற மத்தாய், அவர்களைப் பழி வாங்க விரும்புகிறார். ஆகவே, அந்நேரத்தில் பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பதை அவர் விரும்பவில்லையாம்!

—இந்தக் காரணத்தைக் காட்டித்தான் தன் ராஜினாமாவை அங்கீகரிக்கும்படி நேருவுக்கு அவர் நீண்ட கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார்!

(1) பண்டிதருடைய உதவியாளர் 1946-ல் அரசாங்கத்தில் பணியாற்றுவதற்கு மறுத்தாராம்.

(2) பிறகு, பண்டிதருக்கு உதவி செய்ய வேண்டும் என்கிற ஒரே நோக்கத்திற்காகத்தான் பணியாற்ற ஒப்புக் கொண்டாராம்.

(3) கடந்த பல ஆண்டுகளில் அரசாங்கப் பணியிலிருந்து தன்னை விடுவித்து விடுமாறு அவர் பண்டித நேருவைப் பலமுறை விரும்பிக் கேட்டுக் கொண்டே இருந்திருக்கிறாராம்.

மத்தாய்க்கும் பண்டிதருக்கும் உள்ள தொடர்பு சாதாரணமானதன்று.

அவர் நேருவுக்கு விசேஷ—அந்தரங்கச் செயலாளர்!

அவர் பண்டிதரோடு பழகியது போல் வேறு எவருமே பழகி இருக்க முடியாது—என்று எல்லோரும் கருதுகிறார்கள்.

நிலைமை அப்படியிருக்க 'அந்தரங்கங்கள்' நிரம்பிய அந்தக் கடிதத்தைப் பிரசுரிப்பதற்கு பண்டிதர் எப்படி தன் ஒப்புதலைத் தெரிவித்தார் — என்று பாராளு மன்றத்திலேகூட வினா எழுப்பி இருக்கிறது!

இதற்குப் பண்டிதர் பத்திரிகை நிருபர்களுக்குச் சொல்லிய பதில் என்ன தெரியுமா?

"நான் உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டவன்...அதனால் தான்

பொதுக்குழுத் தீர்மானங்களை விளக்க புதுக்கோட்டையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில்...

ஆடவர் அரங்கில் ஒரு பகுதி — பெண்டிர் அரங்கில் ஒரு பகுதி!

நான் பல தவறுகளைச் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது....”

“மத்தாய் அந்தக் கடிதத்தைப் பிரசுரிக்கட்டுமா என்று என்னைக் கேட்டதென்னவோ உண்மைதான்! அப்போது நான் வேறு ஏதோ ஒரு உணர்ச்சியில் இருந்தேன்......அதனால் ஆத்திரத்தோடு ‘சரி’ என்று சொல்லிவிட்டேன்...”

“அது ஒரு மிகவும் துரதிருஷ்டமான — புத்திசாலித்தனம் கொண்டிராத தவறான வார்த்தைகளைக் கொண்ட கடிதம். நான் அதன் வெளியீட்டிற்கு ஓரளவுக்கு—ஆனால் மறைமுகமாகப் பொறுப்புள்ளவன்...”

“நான் சிறிது கோபமடைந்துவிட்டேன். ஆனால் சற்று அதிகமாக அதைப்பற்றி சிந்தித்திருக்க வேண்டும்......உங்களுக்குத்தான் தெரியுமே; சில சமயங்களில் நான் தவறாக செயல்பட்டு விடுகிறேன்...”

—இதைப் போலத்தான் நேருவின் தவறினால் பாக்கிஸ்தான் பிரிந்தது என்ற ஆசாத்தின் குற்றச் சாட்டையும் தன்னுடைய ‘தவறுகள்’ பட்டியலில் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்.

வேறு ஏதோ நினைவில் கத்தரிக்கோலை வயிற்றுக்குள்ளே வைத்துவிட்டு, வெற்றிகரமாக இரண சிகிச்சையை நடத்தியிருக்கிறார்.

இதைக் கேள்விப்பட்டதும், பழைய நிபுணர், நோயாளிக் கணவனையிழந்து விதவைக் கோலத்திலிருக்கும் அவரது மனைவியிடம் “ஏதோ தவறு நடந்துவிட்டது; என்னை மன்னித்து விடுங்கள்.”- என்று சிரித்துக் கொண்டே கூறினாராம்!

பண்டிதர் தவறுகளைச் செய்துவிட்டு அவைகளை ஒப்புக்கொள்வதற்கும் மேற்சொன்ன நிபுணரின் கூற்றுக்கும் என்ன வித்யாசமிருக்கிறது?

விட்டதால், பண்டித நேரு இப்போது இந்தப் புதிய வழியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

தங்களுக்குள் ஒற்றுமையின்றி ஒருவரை ஒருவர் வெள்ளையனுக்குக் காட்டிக் கொடுத்துக் கொண்டு காலம் கழித்த இந்திய உபகண்டத்துச் சிற்றரசர்கள் செய்த தவறு, இந்த உப கண்டத்தை ஒரு நூற்றாண்டு காலம் அன்னியருக்கு அடிமைப்படுத்தி வைத்திருந்தது!

ஹிட்லரும், முசோலினியும் செய்த தவறு காரணமாக சரிந்து விழுந்த ஜெர்மனியும், இத்தாலியும் இன்னும் சரியாக எழுந்து நிற்க முடியாமல் தவிக்கின்றன!

கருத்துக்குச் சிறிதளவும் செவி சாய்ப்பது கிடையாது.

இதற்கு இதோ ஒரு உதாரணம்:

“அண்மையில் நாகபுரியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடு, ஒரு ‘சகாப்தம்’ முடியத் தொடங்கிவிட்டதைக் காட்டுவதாகும். 1919-ம் ஆண்டில் நாகபுரியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலிருந்து, காந்தியாரின் செல்வாக்கிற்குட்பட்டிருந்த காங்கிரஸ்காரர்கள், கடந்த 40 ஆண்டு காலமாகத் தாங்கள் உபதேசிப்பதை எல்லாம் வாழ்க்கையில் கடைப்பிடித்து வருவதாகக் கூறி வந்திருக்கின்றனர்...... ஆனால், உபதேசிக்க மட்டுமே செய்வோம்; கடைப்பிடிக்க மாட்டோம் என்கிற காங்கிரஸ் தலைவர்களின் போக்கை நாகபுரி காங்கிரஸ் படம் பிடித்துக் காட்டுகிறது...”

செங்கோல் பிடித்த மேதை செப்புகின்ற சமாதானம் கேளீர்!

இவைகளை எல்லாம் படிக்கும் காங்கிரஸ் தோழர்கள், “ஆகா! நம்முடைய பண்டிதரின் பெருந்தன்மையைப் பார்த்தீர்களா? எவ்வளவு பெருமிதமாக தான் செய்த தவறுகளை ஒப்புக் கொள்கிறார்! இந்த நல்ல குணம் யாருக்கு வரும்?” என்று கேட்கலாம்!

உண்மைதான்; பொது வாழ்க்கையில் ஈடுபடாத தனிப்பட்ட மனிதர்கள் செய்த குற்றங்களை ஒப்புக் கொள்வதால் லாபமிருக்கலாம். ஆனால், பண்டிதர் போன்ற பெருந் தலைவர்கள்—பொறுப்புள்ள பதவியிலே மிடுக்காக அமர்ந்திருப்பவர்கள் இப்படி ஒப்புக் கொள்வது என்பது, நிரபராதிக்கு மரண தண்டனையை விதித்து, அந்தத் தண்டனை நிறைவேற்றப்பட்ட பிறகு, “ஐயோ! தவறு செய்து விட்டேனே!” என்று ஓலமிடுவதற்குத்தான் சமமாகும்.

‘ஆபரேஷன்’ நடந்து கொண்டிருக்கிறது; நிபுணர் என்று பெயரெடுத்த வைத்திய சிகாமணியொருவர் இரண சிகிச்சை நடத்திக் கொண்டிருக்கிறார்; டாக்டர் மீதுள்ள ஒரே நம்பிக்கையால் நோயாளி பிழைத்துக் கொள்வார்—என்று அவரது உறவினர் அனைவரும் குதூகலமாக இருக்கின்றனர்.

இரண சிகிச்சை முடிகிறது. வைத்திய நிபுணரும் ‘சிகிச்சை வெற்றி’—என்று கூறுகிறார்.

நேரம் ஓடுகிறது. மறுநாள் அந்த நோயாளி இறந்துவிடுகிறார். அவரது பிரேத விசாரணை நடக்கிறது.

அவரது பிரேதத்தை அறுத்த வேறொரு வைத்தியரோ நோயாளியின் வயிற்றுக்குள் கத்தரிக்கோல் ஒன்று இருப்பதைக் கண்டுபிடிக்கிறார்.

ஆமாம்; பழைய நிபுணர்தான்

பிரிட்டனிலே முன்பு முதலமைச்சராக இருந்த பால்டுவின் என்பார் இப்படித்தான் செய்வாராம்!

தவறுகளைச் செய்துவிட்டு; பாராளுமன்றத்திலே மற்றவர்களைப்போல் அவற்றை மெழுகி மறைக்காமல் பகிரங்கமாகவே ஒப்புக் கொள்வாராம்!

இதற்குக் காரணம் வெறும் பெருந்தன்மை என்றா நினைக்கிறீர்கள்? அல்ல; அல்ல. இதற்கு அரசியல் விற்பன்னர்கள் வேறு காரணமொன்று கூறுகிறார்கள்.

“இப்படி ‘அவர்கள்’ தவறுகளை ஒப்புக்கொள்வதால் அது பொது மக்களிடையே அவர்கள்பால் இரக்கத்தையும், பரிதாப உணர்ச்சியையும் ஏற்படுத்துகிறது. அதனால் பொது மக்கள் அவர்களை மன்னித்து விடுகிறார்கள். அதன் பிறகு—மன்னிப்பு பெற்றுவிட்ட—மீண்டும் பெறக்கூடிய—தைரியத்தில் அவர்கள் சிரித்துக் கொண்டே மேலும் தவறுகளை வழக்கம் போல் செய்ய ஆரம்பிக்கிறார்கள்!”

—எதையும் மழுப்பி மறைக்கப் பார்க்கும் ‘டெக்னிக்’ பழையதாகி

மனிதனென்றால் தவறு செயயாமலிருக்க முடியாது என்பது உண்மைதான்.

ஆனால் தலைவராக இருப்பவர்கள் தவறு செய்தால் அதன் விளைவு விபரீதத்திற்கு விருந்து வைத்து விடுகிறது.

—இந்த ஆபத்தான சூழ்நிலையைத் தடுப்பதுதான் எப்படி?

—இதற்குத்தான் உண்மையை ஒளிக்காத பத்திரிகைகளும், நல்ல விமர்சகர்களும், துணிவு கொண்ட நண்பர்களும், கூட்டாளிகளும் தேவை; அப்போது தான் தவறுகள்—அவை கருத்துக்களாக உருவாகும்போதே தடுத்து நிறுத்த முடியும்—என்று ஜனநாயகம் வற்புறுத்துகிறது.

இந்தப் பின்னணியில் பார்த்தால் பண்டிதர் தவறு செய்யாத சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறாரா?

ஒரு முறைக்கு இருமுறை சிந்தித்து, சக நண்பர்களது கருத்துக்களையும் தெரிந்து கொண்டு உணர்ச்சி வசப்படாமல் செயலாற்றுகிறாரா? இல்லை!

அவர் சக நண்பர்களது

—பம்பாயிலிருந்து வெளி வருகின்ற ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ என்ற ஆங்கில ஏட்டில், ராஜா ஹதீசிங் என்கிற காங்கிரஸ்காரர் இவ்விதம் எழுதி யிருக்கிறார்.

—இப்படி வேதனையோடு காங்கிரஸ் தலைவர்களின்மேல் குற்றம் சாட்டுகிற அவர், நேருவுக்கு முன்னால் நடைபெற்ற விழிகளில் நீர் நிரப்பும் நிகழ்ச்சி ஒன்றையும் எழுதியிருக்கிறார்:

“காங்கிரசில் உள்ள ‘டம்பாச்சாரி’கள், இயக்கத்தில் உள்ள ஊழியர்கள் தங்கள் கருத்தைத் தெரிவிப்பதற்குள்ள உரிமையைப் பறித்துவிட்டனர்; தங்களுக்குப் பிடிக்காத கருத்துக்களை எல்லாம், சம்பந்தமற்றவை என்றோ, அல்லது தனிப்பட்ட முதலாளிகளின் தூண்டுதல்—சூழ்ச்சி என்றோ கூறி, ஊழியர்களின் உரிமையைப் பறித்துவிட்டனர்.

[தொடர்ச்சி பக்கம்—8]



பொதுக் கூட்ட மேடையில் தலைவர்கள்!

நீதிதேவன் மயக்கம்...?

6-2-59!

மதுரை நீதி மன்றத்திலே ஒரு பெண்! அந்த மங்கையின் பங்கய 'விழிகளிலிருந்து சங்கம் பழம் உருள்வதைப்போல் கண்ணீர் வழிந்தது. அவிழ்த்துவிட்ட கூந்தலை இன்னும் முடித்தாளில்லை!

இரு புருவம் நிமிர்த்திக் கருவிழிகளால் ஏனிந்த நிலை யுனக்கு என்பதைப்போல் பார்த்துவிட்டு, 'அம்மா! **யோகீசுவர நவநீதகிருஷ்ண ஆத்ம சுவாமிகளின்** பேரில் நீ கூறும் குற்றச்சாட்டு என்ன?"—என்ற கேள்வியினைப் போட்டார், மதுரை உதவி செஷன்ஸ் நீதிபதி தனகோடியாப் பிள்ளை!

"ஐயா, நான் காவிரி நீரால் ஈரமாகும் சோழ நாட்டவள்! குளித்தலை தாலுகா கிருஷ்ண ராஜபுரத்தில் வாழுகிறவள். பெயர் திரிபுரம்மா....ஓடியாடித் திரிந்த என்னை, வீட்டுக்குள் அடைத் திட்டார் 'பக்குவமடைந்தாய்' என்று கூறி! பாவாடைக்குமேலே ஒரு மேலாடை போர்த்தித் திரிந்தவள், இப்போது பாலாவிப் புடவை சுற்றிக்கொள்ளும் பருவமடைந்தேன்!

"வெளியுலகம் காண விடவில்லை, என் பெற்றோர். அன்றொரு நாள், 'இரட்டை மரத்துக் கோயிலுக்குச் சாமிவந்திருக்குவாடி' யென்றார்கள். பெரு மகிழ்ச்சியுடன் போனேன். சாமிகள் ஏதோ கதை சொல்லிக்கொண்டிருந்தது.

"அறிதுயில் புரிந்த அய்யனை அடித்தான், அரசன்! அந்த அடி அய்யனுக்கு மட்டுமா விழுந்தது? அன்னைக்கு, அகில உலகத்திற்கு, அண்ட சராசரங்களில், உள்ள புழு பூச்சி, பேருயிர், சிற்றுயிர் அத்துணைக்கும் விழுந்தது. அந்த அடியின் தழும்புதான் நம் முதுகில் தெரியும் வளை கோடு! பிட்டுக்கு மண் சுமக்க வந்து அடிபட்ட அந்தப் பெருமானின் பெருவிழா மதுரையில் நடக்கிறது. வருகிறீர்களா, அந்த புட்டுத் திருவிழாவிற்கு?"—என்று ஆத்தீகப் பெருமக்களைக் கேட்டார், அந்தப் புதுச் சாமியார்.

"புறப்படுவோம் என்றார்கள் சிலர். அவர்களுள் புதிதாகப் பூத்து மலர்ந்த நானும் ஒருத்தி!

"மதுரை மாநகர் வந்தோம்! திருவிழாப் பார்த்தோம். அந்த திவ்ய க்ஷேத்திரத்தின் அருமைபெருமைகளைக் கூறிக்கொண்டே வந்தார், சாமியார்!

"க்ஷேத்ராடனம்' முடிந்தது. சாமியார் குளித்துவிட்டுக் குந்தினார், சிவபூஜைக்கு!

"பூஜை முடிந்து எழுந்தவர், "புறப்படுங்கள்! அன்னை மீனாட்சியின் தேவாலயத்தைத் தொழுது வருவோம். கயற்கண்ணியம்மையைச் சந்திக்கக் காலமேது; நேர மேது? உம்...உம்..."—என்றார்.

"நானும், என் தமையன்மாருடன் கிளம்பினேன். என்னுடைய தாய் வர மறுத்துவிட்டாள், உடல் அசதியினால்!

"மதுரையைச் சுற்றி வந்தோம்!

"என்னுடைய சகோதரர்கள் களைப்பால் மரத்தடியில் படுத்துக் கொண்டார்கள். நானும் உட்கார்ந்து கொண்டேன்.

"கொஞ்ச நேரம் சென்றது. குந்தியிருந்த சாமி எழுந்தார் 'வா பெண்ணே என்னுடன்!' என்றார். மறைவிலே கூட்டிப் போனார். நானோ மருண்டு—மனம் இருண்டு நின்றேன்.

"பெண்ணே! என்னிடம் தெய்வீகசக்தி ஒளி விடுவதை நீ பார்த்ததில்லையே! அதனுடன் ஒன்றிவிடு; அதனால். கேடு ஒன்றும் வராது! சுட்டால் செம்பொன் ஒளி இழக்குமா? அகிலைப் புகைத்தால் நாற்றம் கிளம்புமா? நான் தொட்டால் களங்கம் விளையுமா? இல்லை பெண்ணே இல்லை!...எங்கே உன் வெள்ளியிதழ்!" என்றார்.

"நானும் போராடினேன், அந்த மிருக பலத்துடன்! என்றாலும் காமம் வென்றது. ஐயோ! என் கன்னித் தன்மை அழிந்தது; கற்பு காற்றோடு பறந்தது! சந்தி சிரிக்கும் பொருளானேன்!

"சீரங்கமாடித் திருப்பாற்கடலாடி, மாமங்கமாடி மதுரைக் கடலாடி, தைப்பூசமாடித் தவம் பெற்று வரலாமென்று கடவுளடியார்களை நம்பிப் போகும் கன்னியர்களுக்குக் கலங்கரை விளக்கமானேன்; ஆண்டவனடியார்களை நம்பி இளம் பெண்ணை அவருடன் அனுப்பும் பெற்றோருக்கு ஒரு அபாய எச்சரிக்கையானேன்!"

—தன் சோகக் கதையை கண்ணீர்த் தூரிகையால் எழுதிக் காட்டினாள் திரிபுரம்மா!

நீதி மன்றத்திலே பேச்சில்லை; மூச்சில்லை!

நீதிபதி நிமிர்ந்து உட்கார்ந்தார். வழக்கை ஒத்திவைப்பதாகக் கூறினார்!

கோர்ட் கலைந்தது!

செங்கோல் பிடித்த...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

"சர்க்கார் நடத்தும் காரியங்களில் நிலவும் இலஞ்சம், வஞ்சனை, நிர்வாகச் சீர்கேடு, பணம் கையாடல் முதலிய ஊழல்கள் நிலவுவதை, நாட்டின் முன்னேற்றத்தையும் சிக்கனத்தையும் கருதிக் கண்டித்தால், கண்டிப்போரின் யோக்கியதாம்சம் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டனர். அப்படிக் கண்டிப்போருக்கு எல்லாம் 'தனியார் துறையின் ஆட்கள்' என்ற பட்டம் சூட்டினர்.

"தனியார் துறைக்குத் தந்த உறுதி மொழிகளையும், அவற்றைச் சர்க்கார் மீறியிருப்பதையும் சுட்டிக் காட்டும்போது, 'பொதுத் துறையைச் சீரகேடுறச் செய்வதற்காக இப்படிப் பேசுகிறார்கள்' என்று பதில் தந்தனர்.

"நாகபுரி மாநாட்டில் ஒரு அப்பாவி காங்கிரஸ்காரர், 'ஓ! சீசர் அவர்களே! உங்கள் முன்னிலையில் நான் வாய் திறக்க அனுமதிப்பீர்களா?' என்று பண்டித நேருவை நோக்கிக் கெஞ்ச வேண்டியிருந்தது!"

—இப்படி சர்வாதிகார தர்பார் நடத்துகின்ற காங்கிரசாரின் தலைவர்தான் இன்று தவறுகளின் நிலைக்கலனாக மாறிவிட்டார்!

'ஜனநாயகம்; ஜனநாயகம்' என்று வாய்ப்பறை அடித்துக் கொண்டு அப்படிப்பட்ட சூழ்நிலைக்கே முதல் எதிரியாக மாறிக் கொண்டிருக்கிறார், அவர்!

அந்தோ, பரிதாபமே! ஆசியாவின் ஜோதி வெட்டி மறையும் மின்னலுக்கல்லவா ஈடாகிவிட்டது, இன்று!

புவிமெச்ச வாழ்ந்த...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

டித்த 'ஜென்மங்கள்' அந்தச் சேதியை வெளியில் தெரிய வராமல் இருட்டடிப்புஞ்செய்து விட்டன.

அவரது ஊரிலே–அவராலேயே ஏற்பாடு செய்யப்பட்ட திருமணம் ஒன்று! அந்த நன்னாள் வந்தது. நமது ஆசிரியர் கந்தப்பா அன்று திருமணத்துக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் வந்ததோ செய்தி மட்டுந்தான் – கந்தப்பா கொல்லப்பட்ட செய்தி அது! ஊர் அல்லோலகல்லோலப் பட்டது. மணவீடு, பிண வீடாகியது. வள்ளிப்பிள்ளை விழுந்து புரண்டு ஆற்றொணாது அழுதார்! குழந்தைகள் கதறி அழுதன!

பயன்......?

பொதுக்குழுப் புகைப்படங்கள் எடுத்து உதவியவர்:
திருச்சி பாண்டுரங்கன்

கந்தப்பா போனவர் போனவர்தான்; வள்ளிப்பிள்ளைவிதவை! குழந்தைகள் அநாதைகள்! காப்பாற்றுவது யார்? 'கடவுள் காப்பாற்றட்டும்' என்று சொல்லிக் கையை விரித்துவிட்டது, அரசாங்கம். கந்தப்பாவின் கொலையைத் தடுக்கும் பொறுப்பை ஏற்காத கடவுள் இன்று குடும்பக் குறையைத் தீர்ப்பார் என்று வள்ளிப்பிள்ளை திடமாக நம்பியிருந்தால், அரசாங்கத்தின் உதவியை நாடியிருக்க வேண்டியதில்லை. இந்த உண்மை ஆளவந்தார் உள்ளத்தில் உதயமாகவில்லை!

பத்து வருடம் கடமை செய்யாத எவருக்கும் 'பென்ஷன்' கிடையாதாம்! அதனால் கந்தப்பாவுக்கு—அவரது அநாதைக் குடும்பத்துக்கு அது இல்லையாம்!

நன்கொடைப் பணம்—அதுவும் கிடையாதாம்!

நஷ்டஈடு — அதுகூடக் கிடையாதாம்!

ஹிங்குரக் கொடையில் கந்தப்பாவிடமிருந்து அபகரிக்கப்பட்ட பொருட்கள்......? எப்படிப் போயின இப்போது எங்கே இருக்கின்றன என்று விபரம் தெரியாதாம். அதனால் அவற்றைத் திரும்பிப் பெறலாம் என்ற நம்பிக்கை வேண்டாம் என்று சொல்லாமல் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படியான முயற்சிகள் இல்லாமல் கந்தப்பாவின் குடும்பம் வறுமையில் வாடி வேதனைத் தீயில் உழலவிடப்படுமாயின். அந்த ஐந்து குழந்தைகளுமே ஒரு நாள் தம் குடும்பத்தைக் குலைத்தவர்களைச் சும்மா விடுவார்களா?

வெம்பகைவேங்கையைவிட வலிமிக்கது வெஞ்சினம்! அது தமிழர்களிடையே வளர்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தாமல் இருப்பது தமக்கு நல்லது என்பதை ஆட்சியாளர்கள் அறிவார்களா?"

* * *

இத்தகைய சம்பவங்கள் ஒன்று இரண்டல்ல; இன்றுங்கூட தினம் தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவாம்; தமிழினத்தாரின் அவல ஒலி குன்றாது எழும்பிக் கொண்டிருக்கிறதாம்!

என்ன பலன்?

இங்கிருப்போர் கல்லாகவே—இளகாத இரும்பாகவே இருக்கும்வரை—கடல் கடந்தோர் ஏற்றுவிட்ட கவலை மாறாது! மங்காது! மறையாது!

திராவிடரின் உறைவாளாய் - தீந்தமிழின் தேன் துளியாய் - அரசியல் ஆரமாய் விளங்கும்
நக்கீரன்
மாதம் இருமுறை .... ஆசிரியர்: அ. செல்வராசன்
விலை 13 புதியகாசுகள்
விற்பனையாளரற்ற ஊர்களுக்கு நற்பணியாற்றக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.......
விபரங்கட்கு :- நக்கீரன், 77, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, முரசொலி அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு